# தேவனுடைய புத்திரர்கள்

பிதாவாகிய தேவனுக்கு ஒரோ பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துக்கு சமாதான பிரபு என்ற காரணப் பெயர் உண்டு. அவர் பூலோகத்திற்கும் பரலோகத்திற்கும் இடையிலே சமாதானத்தை உண்டு பண்ணும்பொருட்டு, அவர் இந்த பூவுலகிற்கு வந்தார். “அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத் தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத் தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.” *(எபேசியர் 2:12-17)* இந்த சமாதானத்தை தேவ குமாரனாலே மட்டுமே உண்டு பண்ண முடியும். இந்த சமாதானத்தை அவர் எப்படி உண்டு பண்ணினார்? அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. *(கொலோசேயர் 1:20)*. சுமாதானத்தை உண்டு பண்ணும் பொருட்டு, அவர் தம்முடைய உயிரையே தியாகம் செய்தார். அவர் வழியாக தேவனுடைய பிள்ளைகள் என்ற தகுதியைப் பெற்ற நாமும், அந்த பெயருக்கு ஏற்றபடி சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும். தேவனை அறியாதவர்களை தேவனோடு சேர்க்கின்றவர்களாகவும், பகைமையிலே வாழும் மனிதர்களை நமக்கு கொடுக்கப்பட்ட அளவின்படி ஒப்புரவாக்கின்றவர்களாகவும், பிரிவினைகள் அகன்று ஒருமனம் உண்டாகும்படி எப்போதும் ஜெபிக்கின்றவர்ளாகவும் காணப்பட வேண்டும். அதை நிறைவேற்றுவதற்கு சில வேளைகளிலே கிரயம் கொடுக்கப்பட வேண்டும். யிஅப்பொழுது நாம் தேவனுடைய புத்திர ர்களாக காணப்படுவோம்.

**கொலோசெயர் 1:20**

**அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,**

**ஜெபம்**: என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொண்ட தேவனே, நானும் அந்த மனநிலையுடையவனாக, உம்மை அறியாதவர்களை உம்மிடம் சேர்க்கின்றவனாக வாழும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவின் சாயலிலே வளருங்கள்

**ரோமர் 10:15**

சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.

தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துதாமே, அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் *(ரோமர் 8:29)*. எனவே நாம் பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்டபுதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கின்றோம். *(கொலோ 3:10)* கிறிஸ்துவின் சாயலிலே வளருவதென்பதன் பொருள் என்ன? இந்த பூமியிலே அவர் வாழ்ந்து காட்டிய வழியிலே வாழ வேண்டும். அவர் இந்த பூவுலகிற்கு வந்த நோக்கத்தை நாம் அறிந்த கொள்ள வேண்டும். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கின்றார் என்று ஆண்டவராகிய இயேசு தம்மைக் குறித்து கூறியிருக்கின்றார். மனித குலத்திற்கு இரட்சிப்பு அவராலே மாத்திரம் உண்டாகின்றது. அவரைத் தவிர வேறு வழியில்லை. அவர் வழியாகவே, மனிதர்கள் பரலோகத்தோடு ஒப்புரவாக்கப்பட்டு, சமாதானத்தை கண்டடைய முடியும். தேவனுடைய குமார்களாகவும், குமாரத்திகளாவும் அழைக்கப்பட்ட நாம், அந்த சமாதானத்தின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். யார் அந்த மற்றவர்கள்? ஆயிரக்கணக்கான மைகளுக்கு அப்பாலே இருக்கின்றவர்களா? உகலறியா ஊர்களிலும், குக்கிராமங்களிலும் இருக்கும் பாமர மக்களுக்கு மாத்திரமா? இல்லை, முதலாவதாக, நாம் அனுதினதும் நம்மோடு இடைப்படும், சக மாணவர்கள், வேலை செய்பவர்கள், அயலவர்கள் அவர்களுக்கு அந்த சமாதானத்தின் நற்செய்தியை நாம் அறிவிக்க வேண்டும். அறிவிப்பதென்பதன் பொருள் என்ன? நற்செய்தியை பிரசங்கிப்பதா? துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதா? அவைகளுக்கு முன்னதாக, நம்டைய வாழ்க்கையானது நம்மோடு வாழ்பவர்கள் மத்தியிலே கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும். கிறிஸ்துவின் சாட்சிகளாவும், நடமாடும் நிரூபங்களாகவும் காணப்பட வேண்டும். மற்றவர்கள் அதைக் கண்டு பரம பிதாவை மகிமைப் படுத்த வேண்டும். ஒருவனுடைய வாழ்விலே தேவனோடுள்ள சமாதானம் தங்கியிருந்தால், அவன் கிறிஸ்துவை தரித்தவனாக அவருடைய சமாதானத்தின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் பெற்றுக் கொண்ட சமாதானத்தின் நற்செய்தியை, கிடைக்கும் சந்தர்பங்களிளெல்லாம், என் வாழ்வினாலும், வாயினாலும், அறிவிக்கின்ற உணர்வுள்ள வாழ்க்கை வாழ வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | மாசி 3

📖 மாலை வாசகம் – லூக்கா 19:42

# பிரிவினைகளை ஆதரிக்கின்றவர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவனுக்கு, பிறப்பிலே பெற்றோர் தனக்கு வைத்த பெயரை மாற்றி, தயாளன் என்று தன் பெயரை சட்டபூர்வமாக பதிவு செய்து கொண்டான். ஆனால், தயாள குணத்திற்கும் அவனுக்கும் எந்த சம்பந்ததும் இல்லாதிருந்தது. இப்படியாக பெயரை மாற்றும் உரிமையானது தேசத்திலுள்ள குடிமக்கள் யாவருக்கும் இருந்தது. ஒருவன் எந்தப் பெயரை சொல்லியும் தன்னை அழைக்கலாம் ஆனால், அவனுடைய உள்ளான மனிதனுக்கும் அந்த பெயருக்கும் சம்பந்தம் இருக்கின்றதா என்பது கேள்விக்குரியதாக இருக்கும். ஒரு விசுவாசியானவன், "நான் இரட்சிப்படைந்தவன், நான் கிறிஸ்தவன், நான் எப்போதும் தேவனோடிருக்கின்றேன்" என்று ஒருவன் தன்னை கூறிக் கொள்ளலாம். ஆனால், அவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சம்பந்தம் இருந்தால் விசுவாசி என்னும் பதம் அவன் வாழ்விலே கருத்துள்ளதாக இருக்கும். தேவனை நேசி, பிறனை நேசி என்று கற்பனைகளின் சுருக்கத்தை ஆண்டவராகிய இயேசு கற்றுக் கொடுத்தார். உண்மையாக தேவனை நேசிப்பவனுடைய வாழ்விலே, தேவனுடைய வார்த்தை நிலைத்திருக்கும். அப்படி நிலைத்தருக்கதால் அவன் தன் பிறனை உண்மையாக நேசிப்பான். தேவனை நேசிக்காதவன், தன் பிறனை நேசிக்கின்றேன் என்று கூறிக் கொள்ளலாம், ஆனால் அந்த நேசமானது கருதற்றதாக இருக்கும். அது போலவே, நான் தேவனோடு சமாதானமாக இருக்கின்றேன் என்று கூறியும், பிரிவினைகளுக்கு ஆதரித்து வந்தால். அவன் தேவனுடைய சமாதானத்தை இன்னுமாய் அறியவில்லையென்பது பொருளாகும். நாம் மற்றவர்கள் மத்தியிலே சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால், அதை உலக முறைமையின்படி செய்தால், அவை தற்காலிகமானதாக இருக்கும். பின்நிலைமை அதிக குழப்பமுள்ளதாக இருக்கும். ஆண்டவராகிய இயேசுதாமே, இந்த உலகம் தருகின்ற பிரகாரமாக சமாதானத்தை தருவதில்லை. அவர் தம்முடைய சமாதானத்தை நமக்கு தந்தார். அவைகள் சூழ்நிலைகளோடு மாற்றமடைவதில்லை. எனவே உங்கள் உள்ளந்தரியங்களை ஆராய்ந்து அறியுங்கள். நீங்கள் விசுவாசிகள் மத்தியிலே பிரிவினைகளை எந்த விதத்திலும் ஆதரிக்கின்றவர்களாக இருந்தால், உங்களில் தேவ சமாதானம் நிலைத்திருக்கின்றது என்று கூறிக் கொள்ள முடியாது.

**யோவான் 14:27**

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்;**

**ஜெபம்**: பொய் சாட்சிகளையும், பிரிவினை உண்டாக்கின்றவர்களையும் அருவருக்கின்ற தேவனே, உம்முடைய சமாதானத்திலே நிலைத்திருக்கும் கனிகளை என் வாழ்வில் காண்பிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சமாதானம் செய்கின்றவர்கள்

விசுவாச மார்க்கத்தார், சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களாக காணப்பட வேண்டும். தன் ஆத்துமாவின் ஏழ்மை நிலையை உணராதவன், எப்படியாக இரட்சிப்பின் அவசியத்தை உணர்ந்து கொள்வான். இரட்சிப்பின் அவசியத்தை உணராதவன், எப்படி தன் பாவங்களைக் குறித்து மனம் வருந்துவான்? இரட்சிப்பை பெற்றுக் கொள்ளாவனுக்கும் தேவனுக்கும் சம்பந்தம் ஏது? நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தபம் ஏது? எப்படி அவனுடைய வாழ்விலே தேவ குணாதிசயங்களாகிய சாந்தகுணம், தேவ நீதி, இரக்கம் நிலைகொண்டிருக்க முடியும்? ஒருவன் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத சிந்தப்பட்ட இரத்தத்தினாலே கழுப்படாவிட்டால், அவன் இருதயம் எப்படி சுத்தமாக்கபட முடியும்? “நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்.” அப்பா பிதாவே என்று கூப்பிடும் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்ற தேவ பிள்ளைகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் இருந்த அந்த தூய ஆவியானவர் ஒருவனில் நிலைத்திருந்தால், அங்கே தேவ சமாதானம் உண்டாயிருக்கும். அத்தோடு யாவும் நிறைவு பெறுவதில்லை. தேவ சமாதானம் தங்கியிருந்தால், தேவ புத்திரர்களாகிய அவர்கள், தேவனுக்கேற்றவைகளை சிந்திப்பார்கள். தேவனுக்கேற்றவைகளை நடப்பிப்பார்கள். அவர்கள் ஒப்புரவாகுதலின் ஊழியத்தை பெற்றவ தேவ குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய அவர்கள் சமாதானம் செய்கின்றவர்களாக காணப்படுவார்கள். இது தேவ பிள்ளையாக இருப்பதற்குரிய தகைமையயல்ல,மாறாக இந்து தேவ பிள்ளையினுடைய சுபாவமாக இருக்கின்றது.

**மத்தேயு 5:9**

**சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.**

**ஜெபம்:** அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை எனக்கு தந்த தேவனே, என்னுடைய அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சமாதானத்தை நாடுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ராஜ சேவை செய்யும் சில ஊழியர்கள் ஒன்று சேர்ந்து, தங்கள் ராஜாவிற்கெதிராக துரோகத்தை செய்து விட்டதால், ராஜ சமுகத்தைவிட்டு ஓடி, மலைகள், குகைகள், காடு களிலே சென்று ஒளித்துக் கொண்டார்கள். சில மாதங்களுக்கு பின்னர், அவர்களில் ஒருவன், தன் வாழ்வின் பரிதாப நிலைமையை உணர்ந் ததால், அவன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல், ராஜா சமுத்திற்கு சென்று, அவர் முன்னிலையிலே சாஷ்டாங்கமாக விழுந்து, தன்குற்றங்களை அறிக்கை செய்து, கண்ணீரோடு, இரக்கத்தை வேண்டி நின்றான். ராஜா கொடுக்கும் நீதியான தண்டனையை ஏற்றுக்கொள்ள தன்னைத் தாழ்த்தினான். அவ னுடைய உண்மையான மனந்திரும்புதலைக் கண்ட ராஜா அவனு க்கு மன்னிப்பை வழங்கி, அவனை மறுபடியும் ஏற்றுக் கொண்டான். ராஜாவோடு அவனுக்கு சமாதானம் உண்டாயிற்று. அவனோடு கூட துரோகம் செய்தவர்களில் சிலர், அவ்வண்ணமாக ராஜாவை அணுகி மன்னிப்பை பெற்றுக் கொள்ள வாஞ்சையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால், அதை எப்படி செய்வது என்றும், ராஜா அதை ஏற்றுக் கொள்ளவரா என்பதையும் அறியாதிருந்தார்கள். ராஜாவோடு சமாதானத்தை விரும்பாத சிலர், அவர்களை தடுத்து நிறுத்த முயற்சி செய்தார்கள். ராஜா உங்களை கொன்று போடுவார் என்று பயமுறுத்தினார்கள். ஆனால், ராஜாவின் மன்னிப்பை பெற்று, சமாதானத்தை அடைந்த அந்த ஊழியனோ, ராஜாவின் குணாதிசயத்தை அறிந்திருந்ததினால், அதை எப்படி பெற்றுக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு அறிவித்தான். பிரியமானவர்களே, ஒருவேளை குற்றங் குறைகளால் சோர்ந்து ஒடுங்கிப் போயிருந்தால் அல்லது அவ்விதமான சூழ்நிலைகளை ஏற்பட்டால், தேவ சமுகத்தை விட்டு ஓடிப் போய்விடாதிருங்கள். நம்முடைய பிதாவாகிய தேவன்தாமே, தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். அப்படியானால், மனம் வருந்துகின்ற தன்னுடைய சொந்தப் பிள்ளைகளுக்கு மனதுருக்கத்தை காண்பியாதிருப்பாரோ? எனவே, தேவனை அண்டிச் சேருங்கள். குறைகளை மனதார அறிக்கையிடுங்கள். தேவ சமாதானத்தை காத்துக் கொள்ளுங்கள். அவரை அண்டிச் சேருகின்ற ஒருவரும், வெட்கப்பட்டுப் போவதில்லை.

**ரோமர் 10:11**

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.

**ஜெபம்**: மனதுருக்கமுள்ள பிதாவாகிய தேவனே, நான் உமக்கெதிராக செய்த குற்றங்களை எனக்கு மன்னித்து, இரட்சிப்பின் சந்தோஷம் என்னில் நிலைத்திருக்க எனக்கு இரக்கம் காண்பிப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொறுமையோடு ஓடுங்கள்

பந்தைய சாலையிலே பரிசு பெறும்படி ஓடுகின்ற வீரர்கள், தங்கள் மேல் சுமைகளை ஏற்றிக் கொள்வதில்லை. மாறாக, பந்தையப் பொருளை பெறும்படிக்கு, தங்கள் சீருடையையும், காலணிகளையும் கூட மிகவும் இலகுவாக்கிக் கொள்வார்கள். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற ஜீவ ஓட்டப் பந்தையம் உண்டு. நாம் ஓடும் பந்தைய சாலையானது, நவீன ஓட்டப்பந்தைய சாலையைப் போல் சமமானதும், பார்வைக்கு நேர்த்தியானதும் அல்ல. கோணலும் மாறுபாடுமான இந்த உலகத்தை கடக்கும்படி ஓடிக் கொண்டிருக்கின்றோம். போகும் வழியிலே, பல பாரங்கள் நம்மை சூழ்ந்து கொள்கின்றது. பாவங்கள் நம்மை சுற்றி நெருங்கி நிற்கின்றது. நாம் அவையாவற்றையும் நம்மை விட்டு தள்ளிவிட வேண்டும். "அன்றி யும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோ 3:12) என்று பரிசுத்த வேதாகமம் முன்னறிவித்தபடி, உலகத்தின் போக்கை பின்பற்றாமல், தேவ நீதியின் வழியிலே நடக்கும் போது, இந்த உலகத்தினால் நமக்கு துன்பங்கள் உண்டாகும். இந்த துன்பங்கள் பல வடிவங்களிலே வருகின்றது. ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் நடந்தது போல, இன்றும் சில இடங்களிலே, கிறிஸ்துவின் நிமித்தம், சிலர் அதிகமாய் துன்பப்படுத்தப்படுகின்றார்கள். உபத்திரவங்கள், வியாகுலங்கள், துன்பங்கள், பசி, நிர்வாணம்போன்றவற்றை சகித்தக் கொள்கின்றார்கள். இன்னும் சிலர் ௱நசமோசங்களை சகித்து, இரத்த சாட்சிகளாக மரிக்கின்றார்கள் என்பதை செய்திகள் வாயிலாக அறிகின்றோம். சில தேசங்களிலே, இன்னும் இப்படியான சூழ்நிலைகள் ஏற்படாவிடினும், பாலர் பாடசாலையிலே இருந்து, முதிர்வயதடைந்து மரிக்கும்வரையும், பலவிதமான, மறைமுகமான துன்பங்களுக்கும், எதிர்புகளுக்கும், ஏளனங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். அந்த வேளைகளிலே, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவருடைய நாமத்தினிமித்தம் உபத்திரவங்களை சகிப்பவர்களுக்கு பரலோக ராஜ்யம் பரிசாக கொடுக்கப்படும்.

**எபிரெயர் 12:3**

**ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** நித்திய கன மகிமைக்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, நீர் தருகின்ற பெலத்தினாலே, உமது நாமத்தினித்தம் உபத்திரவங்களை சகித்து, விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிர்பாக்கியமா? அல்லது பாக்கியமா?

"ஏன் இந்த நிர்பாக்கியமான வாழ்க்கை எனக்கு? இந்த பாரச் சிலுவையை சுமக்க நான் என்ன பாவம் செய்தேன்?"என்று விசுவாசிகள் முறுமுறுக்கும் அவலத் தொனியை கேட்டிருக்கின்றீர்களா? ஆம், இப்படியான சத்தங்கள் ஆங்காங்கே அவ்வப்போது தொனிக்கின்றது. ஆனால், "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே." என்று பரிசுத்த வேதாகமம் கூறும் வண்ணமாக, இவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற உபத்திரங்கள் இரத்தம் சிந்துதலுக்கும், மரணத்திற்கும் ஏதுவானவைகள் அல்லவே. ஆனால், வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை இன்ன என்பதை அறியாததினாலே, இது தங்களுக்குண்டான பாக்கியம் என்று உணராமல், இது ஒரு நிர்பாக்கியமான வாழ்வு என்று அறிக்கை செய்கின்றார்கள். இந்த நாட்களிலே மாத்திரமல்ல, வனந்திரனத்தின் வழியாக மோசேயாவன், தேவ ஜனங்களை வழிநடத்திச் செல்லும் போது, அவர்கள் அநேகந்தரம் முறுமுறுத்து கலகம் பண்ணினார்கள். ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலும்கூட, தங்களுக்குண்டாயிருக்கின்ற உபத்திரவங்களைக் குறித்த, விசுவாசிகள் குழப்படைந்திருந்தார்கள். அதனால், அவர்களுக்கும், எங்களுக்கும் விசுவாச வாழ்க்கையையும், அதிலே நிலைத்திருப்பதின் அவசியத்தையும் குறித்து பேதுரு இவ்வண்ணமாக கூறியிருக்கின்றார். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள் ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார் அவர்களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார். (1 பேதுரு 4:12-14). எனவே, அழைப்பின் மேன்மையை அறிந்து கொள்ளுங்கள். சில காலம் தோன்றி மறையும் உபத்திரங்களைக் கண்டு, விசுவாசத்திற்கு எதிராக வார்த்தைகளை பேசாமல், நித்தியம் நித்தியமாய் நிலைத்திருக்கும் பரலோக வீட்டை நினைத்துக் கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசு தாமே, ராஜாதி ராஜாவாக ஆளுகை செய்வார், நாமும், அவருடைய பங்காளிகளாக, அவரோடு கூட ஆளுகை செய்வோம். எனவே, விசுவாச வாழ்க்கையானது பாக்கியமுள்ள வாழ்க்கை என்று அறிக்கை செய்யுங்கள்.

**1 பேதுரு 4:14**

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்;**

**ஜெபம்**: பாக்கியம் பெற்ற சந்ததியாய் எங்களை உமக்கென்று வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் நெருகங்களை கண்டு சோர்ந்து பின்னிட்டு போய்விடாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பாடுகளினால் உண்டாகும் துதி

ஒரு விசுவாசியானவன், “கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது.” அப்படி பாடு பட்டால், தன் அநீதியை நியாயப்படுத்தாதபடிக்கு, அவன் தனக்கு கிடைத்த தண்டனையை ஏற்றுக் கொண்டு, தன் ஆவிக்குரிய ஏழ்மை நிலையை உணர்ந்து, தன் மீறுதலுக்காக துயரமடைந்து, மனந்திரும்ப வேண்டும். அப்பொழுது, அவனுடைய மீறுதல்கள் அவனுக்கு மன்னிக்கப்படும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. *(1 யோவான் 1:9-10)*. ஆனால், ஒரு விசுவாசியானவன், “கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.”

**1 பேதுரு 4:16**

**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.**

மேற்கத்தைய நாடொன்றிலே, பாலர் பாடசாலைக்கு செல்லும் ஒரு மாணவனை, அவனுடைய பெற்றோர், பேய்தனத்திற்குரிய மேற்கத்தைய கலாச்சார கொண்டங்களிலே பங்கேற்க கூடாது என்று அவனுடைய ஆசிரியர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதனால், அந்த மாணவனானவன், அந்த நாளிலே தனித்திருக்க வேண்டியதாயிருந்தது. அவனுடைய சக மாணவ மாணவிகளில் சிலர், அவனை கேலி செய்தார்கள். அந்த மழலை உள்ளம் படைத்த மாணவனுக்கு, தனித்திருப்பது கடினமாக இருந்தது. இந்த உண்மை சம்பவத்தை வாசிக்கும் உங்கள் உள்ளம் எப்படி இருக்கின்றது? ஒன்றுமறியாத அந்த மழலை செல்வத்தை ஏன் இப்படி கடினமான பாதையில் நடத்த வேண்டும் என்று தோன்றுகின்றதா? பாவமறியாத அந்த மழலை செல்வத்தின் உள்ளத்திலே, பேய்தனத்திற்கு அடுத்த காரியங்களை உட்புகுத்துவது, பெரிதான இடறல் என்று தோன்றுகின்றதா? பிரியமானவர்களே, சிலர், சிறிய காரியங்களில் கூட உபத்திவரத்தை சகிக்க மனதில்லாமல், அற்பமான காரியங்களுக்காக விசுவாசத்தை விட்டு விலகிப்போக ஆயத்தமாக இருக்கின்றார்கள். அப்படியானால், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகள் உண்டாகும் போது, அவர்கள் எப்படி நிலைநிற்பார்கள்? அற்பமான காரியங்கள் உங்கள் மனதை பின்னடையச் செய்யாதிருக்கும்படி எச்சரிக்கையாக இருங்கள். பெரிய காரியமோ, சிறிய காரியமோ, தேவ நீதி உங்களில் நிறைவேற இடங் கொடுங்கள். ஒருவேளை அந்த வழியிலே அவமானங்கள், நிந்தைகள் எதிர்நோக்க வேண்டி வரலாம். அவைகளை சகித்துக் கொள்ள ஆவியானவர்தாமே நம்மை பெலப்படுத்தி நடத்துவார்

**ஜெபம்**: அன்பின் தேவனே, கொஞ்சத்திலே உண்மையுள்ளவனாக இருப்பதின் அவசியத்தை உணர்ந்து, எந்த ஒரு காரியத்திலும் நான் பரிசுத்த வாழ்க்கையை சமசரம் செய்யாமல் இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ ஆவியினால் ஆகும்

கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் பல துன்பங்களை சகித்த தேவ ஊழியராகிய பவுல் என்பவர்: "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை". மேலும், "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசானநம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் என்று கூறியிருக்கின்றார். தேவ நீதியானது தங்கள் வழியாக நிறைவேறும்படிக்கு, தங்களை அழைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போல, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை இந்தப் பூவுலகிலே, தங்கள் வாழ்க்கை வழியாக நிறைவேறும்படிக்கு, தங்களைத் தாழ்த்தி தேவ சித்தம் தங்களில் நிறைவேற இடங் கொடு த்தார்கள். நன்மை செய்து பாடநுபவிக்கின்ற போது, முறுமுறுக்காமல், ஆரம்பத்திலே கொண்ட விசுவாசத்திலே நிலைத்திருந்தார்கள். கர்த்த ராகிய இயேசுவினுடைய ஜீவன் தங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் தங்கள் சரீரத்தில் சுமந்து திரிந்தார்கள். நீதிக்கு பதிலாக அநீதி இளைக்கப்படும் போது, தங்கள் மாம்சத்தின்படி போராடாமல், தங்களுடைய போராயுதங்கள் மாம்சத் துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது என்று தேவ நீதி நிறைவேற தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி, நீதியின் கிரீடத்தை தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். பிரியமானவர்களே, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி பொறுமையோடு ஓடிக் கொண்டிருக்கும் நீங்கள், அநீதியைக் கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். ஆரம்பத்திலே கொண்ட விசுவாசத்திலே நிலைத்திருங்கள். நம்மால் கூடாததை நிறைவேற்றி முடிக்கும்படிக்கு தேவ கிருபை என்றுமுள்ளது. மாம்சத்திலே போராடாமல், ஆவியின்படி யுத்தம் செய்யுங்கள். நீதியின் கீரிடத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

**2 கொரிந்தியர் 4:13**

**விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.**

**ஜெபம்:** நீதியுள்ள தேவனே, இந்த உலகிலே, எனக்கு அநீதி இளைக்கப்படும் போது, நான், மாம்ச்திலே கிரியைகளை நடப்பிக்காமல், உம்முடைய சித்தம் என்னில் நிறைவேற இடங்கொடுக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள்

ஒரு தேசத்திலே வாழ்ந்து வந்த குடியானவன் ஒருவன், தேசப்பற்றற்றவனாக வாழ்ந்து வந்தான். தேசத்தின் ராஜாவானவன் நீதியாக தேசத்தை ஆட்சி செய்து வந்த போதும், அந்த தேசத்தின் ராஜாவைக் குறித்தும், ராஜாவின் ஆளுகையைக் குறித்தும் திருப்தியற்றவனாக இருந்து வந்தான். அதனால், அவன் மனதிலே ராஜாவையும், ராஜ்யத்தையும் குறித்து நல்இணக்கம் இல்லாதவனாக இருந்து வந்தான். ஆளுகையைக் குறித்த சமாதானத்திற்கு பதிலாக முறுமுறுப்பும், முறையீடும் இருந்தது. தன் பக்கத்திற்கென்று ஜனங்களை சேர்க்கும்படி ராஜவிற்கும், ஜனங்களுக்கும் இடையிலே பிரிவினைகள் உண்டாக்கும்படியான ஆலோசனைகளை சொல்லி வந்தான். இப்படியாக இருக்கும் வேளையிலே, தேசத்தின் ஆளுகையை குழப்பும்படிக்கு எதிரிகள் சதி செய்யும் போது, தேசத்தைக் குறித்த நல்லிணக்கம் இல்லாத அந்தக் குடியானவன், தேசதில் நீதி, நியாயம் பேணப்படும்படியாக கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் எப்படி சகித்துக் கொள்வான்? அவன் எப்படி ஒருமனப்படுதலைக் குறித்து பேச முடியும்? தேவனுடைய ராஜ்யத்திற்கென்று வேறு பிரிக்கப்பட்ட அருமைய சகோதர சகோதரிகளே, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த உணர்வற்றவன் எப்படி அதை வாஞ்சிப்பான்? எந்த ராஜ்யத்தைக் குறித்து அவன் உள்ளத்திலே வாஞ்சை இருக்கின்றதோ, அந்த ராஜ்யத்தை தேடும்படிக்கு அவன் இடம் கொடுப்பான் அல்லவா? இன்னுமொருவிதமாய் கூறுவோமாக இருந்தால், ஒருவனுடைய மனதிலே எந்த ராஜ்யத்தைக் குறித்த வாஞ்சை நிறைந்திருக்கின்தோ, அவன் வாழ்க்கையிலே அதைக் சார்ந்த கனிகளே வெளிப்படும். தேவனுடைய ராஜ்யத்தையும், ராஜாதி ராஜாவாகிய இயேசுவின் ஆளுகையின் பெருக்கத்தையும் விசுவாசக் கண்களினாலே காண்கின்றவன், அந்த மேன்மையை தான் அடையும்படிக்கு தன் வாழ்விலே எதையும் இழந்து போவதற்கு ஆயத்தமுள்ளவகாக இருப்பான். அதன் மகத்துவத்தைக் குறித்த சமாதானத்தின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பான். ராஜாதி ராஜாவின் நிமித்தம் நிந்தைகளையும், துன்பங்களையும், பொய்யாக சொல்லப்படும் வசைச் சொற்களையும் சகித்துக் கொள்வார்கள். முன்னோடிகளாக இருந்த தேவனுடைய தீர்க்கதரிகளுக்கும் அப்படியே செய்தார்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள் பரலோக பலன் மிகுதியாக இருக்கும்.

**மத்தேயு 5:10**

**நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**ஜெபம்**:நித்திய ராஜ்யத்திற்காகஎன்னை பிரித்தெடுத்த தேவனே, நான் உம்முடைய ராஜ்யத்தை மேன்மையை உணர்ந்து கொள்ளும்படிக்கு, பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்து உம்முடைய வார்த்தையின் வழியிலே நடத்திச்செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 5:11 –12

# பரலோக கைமாறு மிகுதியாயிருக்கும்

இன்று சில நாடுகளிலே, கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம், விசுவாசிகள் வெளிப்படையாக துன்புறுத்தப்படுவதை கேள்விப் படுகின்றோம். வேறு சில நாடுகளிலே, சுதந்திரம் அதிகமாக இருப்பதினாலே, சிலர், அந்த சுதந்திரத்தை தங்கள் துர்குணத்திற்கு மூடலாக உபயோகித்து, சத்தியத்தை விட்டு விலகி, சத்தியத்தின்படி நடக்கின்ற தேவ பிள்ளைகளை, நாட்டுச் சட்டங்களூடாகவும், இன்றும் பல வழிகளிலே அவர்களை ஒடுக்கும்படிக்கு முயற்சி செய்து வருகின்றார்கள். ஆனால், சத்தியத்தைவிட்டு விலகாமல், தங்களை அழைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள விசுவாசிகள், எந்த சூழ்நிலையிலும், சத்தியத்தை விட்டு விலகாமல், நீதியின் பாதையிலே வரும் துன்பங்களை சகித்துக் கொள்கின்றார்கள். ஒருவேளை சில நாடுகளிலே, அந்தத் துன்பங்கள் ஒப்பீட்டளவிலே இலகுவானதாக இருக்கலாம். ஆனாலும், அந்நாடுகளிலே வாழும் கிறிஸ்தவர்கள், சிறிய காரியங்களில்கூட சமரசம் பேசி, நீதி நியாத்தை புரட்டாமல், தேவ நீதியிலே நிலைத்திருக்கின்றார்கள். வேலை இடங்களிலே, பாடசாலைகளிலே, நண்பர்கள் உறவினர்கள் மத்தியிலே, தற்போது அவர்களுக்கு ஏற்படும் துன்பம் இலகுவானதாக இருந்தாலும், அவைகள் பெருகும் போது, அவைகளை கிறிஸ்துவின் நிமித்தம் சகித்துக் கொள்ளும்படிக்கு, தேவ காரியங்களைக் குறித்த அவர்களுடைய மனநிலை தற்போது ஏற்புடையதாகவே இருக்கின்றது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, தேவ நீதியின்படி வாழும் போது, பாடுகளும், உபத்திரவங்கள், நிந்தைகள் உண்டாகலாம். நீங்கள் நன்மை செய்யும் போது, அதற்குகு பதிலாக மற்றவர்கள் உங்களுக்கு தீமை செய்யலாம். அந்த வேளையிலே மனமுடைந்து, சோர்ந்து போகாமல், சத்தியத்திலே நிலைத்திருங்கள். கிறிஸ்துவுக்குள் சந்தோஷப்பட்டு களிகூருங்கள். ஏனெனில், இப்போது ஏற்படும் பாடுகள் அநித்தியமானவைகள், ஆனால் இனி வரவிருக்கும் கன மகிமையானது நித்தியமானது.

**வெளிப்படுத்தல் 22:12**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.**

**ஜெபம்**: அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிக்கும்தேவனே,நான் சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, அழியாமையை தேடுகின்ற உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகம் உங்களை ஏற்றுக் கொள்ளின்றதா?

எங்கள் வாழ்க்கையைப் பாருங்கள், நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று கூறி தேவ நீதியை நிறைவேற்றும் பாதையில், எந்த துன்பத்தையும் அனுபவியாமல், அவிசுவாசிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களோடு நட்பு பாராட்டி, உலக செழிப்புடன் சுக போகமாக வாழ்ந்து கொண்டு, தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்களை குறித்து எச்சரிக்யையுள்ளவர்களாக இருங்கள். "நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" *(2 கொரி 14-15)* என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இருளிலே வாழ்பவர்கள், திவ்விய ஒளியைக் கண்டடைய வேண்டும் என்று நாம் ஜெபம் செய்ய வேண்டும். ஆனால், அந்த ஆச்சரியமான ஒளியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வரைக்கும், ஒருவன் இருளிலே வாழ்பவர்களுடன் ஐக்கியமாக இருந்தால், அவன் தன் பாதுகாப்பின் வேலியை தகர்த்துப் போடுகின்றவனாக இருக்கின்றான். குறித்த காலத்திலே அவன் கிரியைகளின் பின்விளைவுகள், இந்த உலகத்திலே வெளியாக்கப்படும். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பைப் பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசி யுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிரு க்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். நீங்கள் போகின்ற வாசல் விரிவாதனாகவும் வழி விசாலமாகவும் இருக்கின்றதா என்று ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். இந்த உலகத்தார் வாழும் பிரகாரமாக வாழ்வதற்கு, நீங்கள் ஆராதிக்கின்ற இடத்திலே எந்த தடையும் கண்டிப்பும் இல்லாதிருந்தால், நீங்கள் போகின்ற வழியைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக் கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தா ராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**யோவான் 15:19**

**நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்;**

**ஜெபம்**: அழியாமையைத் தரித்துக் கொள்ளும்படி என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களினாலே நான் இழுப்புண்டு, உம்மைவிட்டு தூரம் போகாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்

# உலகம் ஏன் பகைக்கின்றது?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சில மாணவர்கள், அவ்வப்போது, ஒன்று சேர்ந்து கடற்கரை ஓரமாக சென்று, கடலிலே நீந்தி, சிற்றுண்டிகளை உண்டு வந்தார்கள். அது பலரின் பார்வைக்கு நன்றாக இருந்ததால், ஒரு நாள் அவர்களோடு சேர்ந்து ஒரு விசுவாசியின் மகனானவன் சென்றிருந்தான். அவர்கள் கடலிலே நீந்திய பின் யாவருமாக சேர்ந்து புகைப் பிடிக்க ஆரம்பித்தார்கள். அந்த வேளை யிலே, அந்த இடத்திற்கு புதிதாக வந்த விசுவாசியின் மகனாகிய அந்த மாணவனையும், தங்களோடு சேர்ந்து புகைப் பிடிக்கும்படி கேட்டார்கள். புகைப்பிடிப்பது சுகாதரத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கு கூடாது. நான் என் பெற்றோரை மீறி இப்படியெல்லாம் தகாத காரியங்களை செய்ய மாட்டேன் என்றான். அதை கேட்ட மற்றய மாணவர்கள் யாவரும் அதிர்ச்சியடைந்தார்கள். நீ ஏன் இந்த இடத்திற்கு எங்களோடு வந்தாய் என்று அவனை அதட்டினார்கள். எங்களை காட்டிக் கொடுக்க வந்தாயோ என்று கடிந்து கொண்டார்கள். இன்று நீ எங்களோடு சேர்ந்து புகை பிடிக்காவிட்டால், நீ வீடு திரும்பியதும் எங்களை காட்டிக் கொடுப்பாய். எனவே இப்போது எங்கள் முன்னி லையில் ஒருமுறை புகைத்துக் கொள் அல்லது விரும்பத்தகாத காரிய ங்கள் இங்கே நடக்கும் என்று அவனை மிரட்டினார்கள். அந்த நாளி லிருந்து, அந்த மாணவனை பகைத்தார்கள். அவனைக் காணும்போ தெல்லாம் அவர்கள் தங்கள் இரகசியமான தகாத பழக்கத்தைக் குறித்து தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டதால், அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தருணம் பார்த்திருந்தார்கள். நல்வழியை அறிந்தி ருந்தும், தங்கள் பொல்லாத கிரியைகளை அவர்கள் விரும்புவதால், நீதியின் வழியிலே வாழ விரும்பும் அந்த விசுவாசியின் மகனானவனை வெறுத்தார்கள். அவனை வெறுப்பதற்கு முன்பாக அவர்கள் நீதியின் வழியை வெறுத்தார்கள். அந்தக் காரணத்தினாலே, நீதியின் வழியிலே நடப்பவர்களை காணும்போது, அவர்களை நிந்தித்து, துன்பபடுத்துவதற்கு காரணங்களை தேடுகின்றார்கள். எனவே தேவ நீதியின் வழியிலே நடக்கும் போது, துன்பங்களை சந்திக்க நேர்ந்தால், அதைக் குறித்து ஆச்சரியப்படாதிருங்கள். அவர்களுடைய மனதில் இருக்கும் உங்களைக் குறித்த வெறுப்பானது, உங்கள் நீதியின் வாழ்க்கையைக் குறித்து சாட்சி கொடுகின்றது. எனவே மகிழ்ந்து களிகூருங்கள். உங்கள் கைமாறு மிகுதியாயிருக்கும்.

**யோவான் 3:20**

**பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.**

**ஜெபம்:** நீதியின் வழியிலே வாழ என்னை அழைத்து தேவனே, இந்த உலகமானதுகாரணமின்றி என்னைப் பகைக்கும்போது, நான் என்னுடைய திவ்விய சுபாவத்திலே இன்னுமாய் வளரும்படிக்கு எனக்கு பெலன் தந்து வழி நடத்திச் செல்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பயப்படாமல் இருங்கள்

ஒரு ஊரை ஆண்டு வந்த அதிகாரியானவனின், குமாரனானவன், சில பாவமான காரியங்களையும், நெறிகெட்ட செயல்களையும் செய்து வந்தான். அவன் செய்து வந்த கிரியைகளை குறித்து ஆசையுள்ளவர்கள், அதிகாரியின் குமாரனுடைய பக்கமாக சேர்ந்து கொண்டார்கள். அதிகாரியின் மகனானவன், அவைகளை செய்து வருவதால், எங்களுக்கு தண்டனைகள் ஏதும் கிடைகாது என்று எண்ணிக் கொண்டார்கள். ஆனால், அந்த ஊரிலே, செம்மையான வழியிலே வரும் சிலருக்கு, ஊரிலே அக்கிரியைகள் அருவருப்பாக இருந்தது. அந்த அதிகாரியானவன்,தன் மகனானவனை கண்டித்து திருத்துவதற்கு பதிலாக, செம்மையான வழியிலே வாழும் மனிதர்களுக்கு சரிகட்ட வேண்டும் என்று தீர்மானம் செய்து, தன் குமாரனானவன், செய்து வரும் தகாத கிரியைகளுக்கு எதிராக இருந்த சட்டத்தை தள்ளிவிட்டு, அந்த பாவமான, நெறிகெட்ட செயல்களை சட்டமாக்கிக் கொண்டான். அதனால், அந்த பாவமான நெறிகெட்ட கிரியைகளை எதிர்த்து நிற்கின்ற செம்மையானவர்கள், ஊரின் சட்டத்தின்படி குற்றவாளிகளாக காணப்பட்டார்கள். ஊரின் சட்டத்தின்படி தண்டனைக்கு பாத்திரரானார்கள். அப்படியிருந்தும், செம்மையான வழியிலே வாழ்பவர்களின் நற்பண்புகள், அவர்களின் சுபாவமாக இருந்ததால், அவர்கள் தண்டனைகளை எதிர்நோக்க நேர்ந்தாலும், தங்கள் நற்பண்புகளை விட்டுவிடாதிருந்தார்கள். இப்படியாக இன்றைய நாட்களிலே, நாகரீகம் என்ற போர்வையிலே, சில நாடுகளிலே, பரிசுத்த வேதாககம் அசுத்தம் என்று கூறுகின்ற சில காரியங்களை சட்டாக்கி வருகின்றார்கள். அந்த சட்டதிட்டங்களை ஏற்றுக் கொண்டு சார்ந்து நடக்கின்றவர்கள் அநேகரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள். சில சபைகளும் பரிசுத்த வேதாகமத்திற்கு விரோதமான சட்டதிட்டங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுகின்றார்கள். அத்தோடு கிறிஸ்துவை பற்றிக் கொண்டு சத்தியத்தின்படி வாழும் தேவ பிள்ளைகளையும் அவர்கள் எதிர்த்து நிற்கின்றார்கள். அதனால் என்ன, கர்த்தருக்கு பயந்து செம்மையான வழியிலே நடக்கும் தேவ பிள்ளைகளோ, இவைகளை கண்டு சோர்ந்து பின்வாங்கிப் போவதில்லை. மாறாக, அவர்கள் தேவ ஆவியினாலே பலத்தின் மேல் பெலனடைகின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய கிருபையை கர்த்தர் அனுதினமும் அவர்கள் மேல் பொழிகின்றார். நீங்களும் இத்தகைய பயமுறுத்துதலுக்கு பயப்படாமல், உறுதியுள்ள மனதோடு கர்த்தரை சார்ந்து வாழுங்கள்.

**1 பேதுரு 3:14**

**அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து,**

**ஜெபம்**: நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; என்று கூறிய தேவனே, உமக்கெதிராக மனிதர்களின் பயமுறுத்தலுக்கு நான் பயப்படாமல், உமக்கு சாட்சியாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ நீதியையே நிறைவேற்றுங்கள்

மேதியனாகிய தரியு என்னும் ராஜாவானன், தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த நினைத்தான். அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். அவன் உண்மையுள்ளவனாயிருந்த படியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. தானியேல் தினமும் மூன்று வேளை தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் செய்கின்றவன் என்று அறிந்திருந்ததால், அவனுக்கு எதிராக சதி செய்ய தீர்மானம் செய்து கொண்டு, எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக்குறித்து விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பிக்கும்படி, துர்ஆலோசனையை பிணைத்து, அதை ராஜ கட்டளையாக்கினார்கள். தானியேலோவென்றால், தான் முன் செய்து வந்தது போல தினமும் தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அதனால், அவனை பிடித்து சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். ஆனால், கர்த்தரோ அவனோடிருந்து, எந்த சேதமும் வராதபடிக்கு அவனை காத்து கொண்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனாகிய கர்த்தருக்கு மேற்பட்ட அதிகாரங்கள் ஏதும் இல்லை. சில வேளைகளிலே, சில அதிகாரிகள் தங்கள் மனதை தேவனுக்கு விரோதமாக கடினப்படுத்திக் கொண்டு, தேவ காரியங்களை விசுவாசிகள் செய்யாதபடிக்கு தடை செய்யும்படி சட்டங்களை பிறப்பிக்கலாம். அந்த வேளையிலே தேவனுக்கு பிரியமான தாசனாகிய தானியேலை நினைத்துக் கொள்ளுங்கள். அவன் எந்த மனிதனுக்கோ, ராஜாவுக்கோ, ராஜ்யத்திற்கோ எந்த தீமையை நினைக்காத தேவனுடைய பிள்ளையாக இருந்து வந்தான். ஆனாலும், அவனை துன்பப்படுத்தும்படிக்கும், தேவனை விட்டு பிரிக்கும்படிக்கும் மனிதர்கள் சதி செய்தார்கள். அவன் தன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து நடந்ததால், அவன் அவன் மனிதர்களுக்கோ, உலகின் அதிகாரங்களுக்கோ பயப்படாமல் இருந்தான். அதுபோலவே, நீங்களும் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவராகிய தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடவுங்கள்.

**மத்தேயு 10:28**

**ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்;**

**ஜெபம்:** அன்பின் தேவனே, ஊமக்கு விரோதமான காரியங்களை செய்வதற்கு வரும் தடைகளை கண்டு பயப்படாமல், உமக்கு பயந்து உமது வழியிலே நடக்கும் உண்மையுள்ள விசுவாசியாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அர்த்தமுள்ள பதவி

ஒரு தேசத்தின் ராஜாவானவன், தன் ஆளுகைக்கு உட்பட்ட குறிப்பிட்ட ஊரொன்றிலே வாழும் குடி மக்கள், சில அதிகாரிகளால் துன்புறுத்த ப்பட்டு, பல கஷ்டங்களை அனுபவத்து வருகின்றார்கள் என்று அறிந்து கொண்டான். ராஜா விதிக்காத பாரமான வரிகளையும் சுமைகளையும் ஜனங்கள் மேல் சுமத்தி, தங்களுக்கு ஆதயம் உண்டு பண்ணி வந்தார்கள். அதனால், ராஜாவானவன், தனக்கு நம்பிக்கைக்கு பாத்திரராக இருந்த ஒரு மந்திரியை தெரிவு செய்து, அந்த ஊருக்கு தன் ஸ்தானாதிபதியாக அனுப்பி, அந்த ஊரிலே நடக்கும் முறைகேடுகளை கண்டிறிந்து, அதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு அவனுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஆதரவுக ளையும் வழங்கி, போர் வீரர்களையும் அவனுக்கு உதவியாக இருக்கு ம்படி அனுப்பி வைத்தான். குறிப்பிட்ட ஊருக்கு வந்த அந்த ஸ்தானாதி பதியானவன், அங்குள்ள அதிகாரிகளின் காரியங்களை ஆராய்ந்து பார் த்த போது, அந்த அதிகாரிகள், அந்த ஸ்தானாதிபதிக்கு, அநேக வெகு மதிகளை கொடுத்து, அவனை தங்கள் பக்கமாக திருப்பிக் கொள்ளு ம்படி பல யுக்திகளை மேற் கொண்டார்கள். ஆனால், அந்த ஸ்தானா திபதியோ, ராஜபக்தியுள்ளவனாக இருந்ததால், ராஜா தனக்கு கொடு த்த பணியிலே மிகவும் கருத்துள்ளவாக இருந்தான். அவன் தான் வந்த நோக்கத்தை மறந்து போகாமல், ராஜ சேவையை நிறைவேற்றி முடிப்ப டிதிலே கண்ணும் கருத்துள்ளவனுமாக இருந்தான். அதனால், அவனு க்கு கொடுக்கபட்ட ஸ்தானாதிபதி என்னும் பெயர் கருத்துள்ளதாகவே இருந்தது. ஆனால், ராஜாவினால் நியமிகக்கப்பட்ட அதிகாரிகளோ, தங்கள் பதவிக்கேற்றபடி நடக்காதிருந்ததால், அந்தப் பதவி கருத்தற் றதாகவும், நோக்கமிழந்ததாவும் இருந்தது. உப்பின் உபயோகத்தைப் பற்றி நாம் யாவரும் நன்றாக இருந்திருக்கின்றோம். உப்பானது அதன் சாரத்தை இலகுவிலே இழந்து போகாது என்று இராசாயனவியலைப் பற்றி அறிந்தவர்கள் கூறிக் கொள்கின்றார்கள். அப்படியிருந்தும், அது அதன் சாரத்தை இழந்து போனால், அதன் பின்னர் அதை உப்பு என்று அழைப்பது கருத்தற்றதும் நோக்கம் இழந்தமுதுமாக இருக்கும். அதுபோலவே ஒரு விவாசியானவன், தன் அடிப்படை குணதிசயமான ஆவியின் எளிமையை இழந்து போகும் போது, அவன் அழைக்கப்பட்ட அழைப்பின் நோக்கத்தை இழந்து போய்விடுகின்றான். அதன் பின்னர் அவன் தன் தப்பிதங்களுக்காக மனம் வருந்தாமலும், தேவ சித்தத்தை நிறைவேற்றக் காத்திராதவனும், தேவனோடு மற்றவர்களை சேரக்காதவ னுமாக மாறிவிடுகின்றான்.

**மத்தேயு 5:13**

**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்;**

**ஜெபம்**: நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்ள என்னை அழைத்த தேவனே, இந்த பூமியிலே வாழும்வரை நான் என் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உணர்ந்து செயற்படுகின்றவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமென்.

# உப்பானது சாரமற்றுப்போனால்....

நம்முடைய ஆண்டவராகிய இயேசுதாமே, தம்மைப் பின்பற்றி வாழும் வாழ்க்கையை குறித்து பேசும் போது, பூமிக்கு உப்பு எவ்வளவு அவசியமாக இருக்கின்றதோ, அதுபோல ஒரு விசுவாசியானவனும், இந்த பூமிக்கு பிரயோஜனமுள்ளவனாக இருக்க வேண்டும். உப்பு அதன் சாரத்தை இலகுவிலே இழந்து போகாதது போல, ஒரு விவாசியானவனும், விசுவாசிக்குரிய சாரத்தை இழந்து போய் விடக் கூடாது. ஒரு விவாசிக்கு இருக்க வேண்டிய இயல்பான சுபாவங்கள் சிலவற்றை பார்ப்போம். ஏதேனிலேஏற்பட்ட, பூர்வீக பாவத்தன் விளைவினால், மனித குலத்திற்கு ஏற்பட்ட, நிவர்த்திசெய்ய முடியாத மனித சுபாவத்தின் உள்ளார்ந்த சீர்கேட்டைப பற்றியும், மனிதர்களுடைய எந்தக் நற்கிரியைகளினாலும் ஈடு செய்ய முடியாத நித்திய ஆக்கினையை குறித்த உணர்வுள்ள இருதயம். மீட்பராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல், ஏதும் செய்ய முடியாத என்பதை ஏற்றுக் கொள்ளும் உள்ளம். பாவங்களை மறைத்து வைக்காமலும், குற்றங்களை நியாயப்படுத்தாமலும், அவற்றை ஏற்றுக் கொண்டு, மீறுதல்களுக்காக துயரப்பட்டு, அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகின்ற இருதயமும். தேவ திட்டத்தின்படி அவருடைய சித்ததை நிறைவேற்றும் மனத்தாழ்மையும், நீடிய பொறுமையும், சொந்த வாழ்விலும், இந்தப் பூமியிலும் தேவ நீதி நிறைவேற வேண்டும் என்கின்ற வாஞ்சையும், ஏழு முறைமட்டுமல்ல, ஏழெழுவது முறை மன்னித்து மறந்து விடுகின்ற இரக்கமுள்ள இருதயமும், மாசில்லாத தேவ உறவை பேணிப் பாதுகாப்பதும், பரலோகத்தோடு பெற்ற சமாதானத்தை, மற்றவர்களுக்கு அறிவிக்கின்ற வாழ்க்கையும், தேவ சித்தம் சொந்த வாழ்விலே நிறைவேறும்படி, கிறிஸ்துவுக்காக துன்பங்களை, சந்தோஷத்துடன் சகித்துக் கொள்ளும் இருதயமும் அவசியமானது என்று ஆண்டவராகிய இயேசு தாமே மலைப் பிரசங்கத்தின் ஆரம்பத்திலே பாக்கியம் பெற்றவர்கள் யார் என்று கூறியிருக்கின்றார். உலக தோற்றத்திலிருந்து உப்பானது, அதன் சாரத்தை மாற்றிக் கொள்ளாதது போல, கிறிஸ்தவனும் காலத்திற்கு காலத், பருவத்திற்கு பருவம், நேரத்திற்கு நேரம், விசவாசியின் இயல்புகளை மாற்றிக் கொள்ளக்கூடாது. அப்படி மாற்றிக் கொள்பவன், தன் இஷ்டப்படி சாரமிழந்து உப்பைப் போல மாறிவிடுகின்றான். சாரழிழந்து உப்பின் உபயோகம் என்ன? “உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள்.” *(லூக்கா 14:34)*

**லூக்கா 14:34**

**உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?**

**ஜெபம்:** அநாதி ஸ்நேகத்தினால் என்னை நேசித்த தேவனே, உமக்கு உபயோகமற்ற பாத்திரமாக நான் மாறிவிடாமல், உமக்கு ஏற்ற பாத்திரமாக நான் திகழும்படிக்கு என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வார்த்தையில் நிலைத்திருங்கள்

இலகுவிலே அதன் சாரத்தை இழந்து போகாத பதார்த்தமாகிய உப்பானது, அதன் சாரத்தை இழந்து போனால், அதை சாரமாக்க முடியாது. உப்பு எப்படியாக அதன் சாரத்தை இழந்து போவது என்பதை கற்றுக் கொள்வது நம்முடைய தியானம் அல்ல. மாறாக ஒரு விவாசியானவன் எப்படி தன் விசுவாசிக்குரிய இயல்பான நோக்கத்தை இழந்து போக முடியும்? அதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

**யோவான் 15:6**

**ஒருவன் என்னில் நிலைத் திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;**

“நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.” “என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத் திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். சாரமிழந்து உப்பானது எதற்கு உபயோகமாகும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. அதுபோலவே, தன் நிலையைவிட்டு தவறிப் போன விசுவாசியும் இருக்கின்றான். “ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்.” (யோவான் 15:6). ஆண்டவராகிய இயேசுவில் நிலைத்திருப்பதென்பதன் பொருள் என்ன? அவருடைய வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால், நீங்கள் சாரமேற்றப்பட்ட உப்பைப் போல, அழைப்பின் நோக்கத்திலே நிலைத்திருப்பீர்கள். அப்பொழுது, நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பீர்கள். இந்தப் பூமிக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருப்பீர்கள். உங்கள் கிரியைகளில் வாயிலாக பரமபிதா மகிமைப் படுவார். ஒருவன் கர்த்தரின் வார்த்தையில் நிலைத்திராவிட்டால் அவனுக்குள் ஜீவன் இல்லாததால், அவன் பிரயோஜனமற்றவனாக வெளியே எறியுண்டு போவான்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் ஒருபோதும் சத்திய வார்த்தைகளை விட்டு வழிவிலகி, நிலை தவறிப்போய்விடாதபடிக்கு, உம்முடைய வார்த்தைகள் என்னிலே எப்போதும் நிலைத்திருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்துவழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாருக்கு நன்மை செய்ய வேண்டும்?

நீதியையும் நியாயத்தையும் குறித்து வைராக்கியமுள்ள வாலிபனொருவன், தன் விடுமுறை நாட்களை கழிப்பதற்காக, தன் பட்டனார் வசிக்கும் ஊருக்கு சென்றிருந்தார். அநேக ஆண்டுகளாக விசுவாசியாக இருந்த அந்த பட்டானாருடைய வீட்டிற்கு இடப்பக்கத்திலுள்ள குடும்பத்தினர், நெறிமுறைகளோடு வாழ்பவர்களும், நன்மை செய்கின்றவர்களும், நன்றியுள்ளவர்களுமாக இருந்துவந்தனர். அவருடைய வீட்டிற்கு, வலப்பத்திலுள்ள வீட்டிலே பல ஆண்டுகளாலமாக வசித்து வந்த தம்பத்தியினர், தங்கள் ஆதாயத்திற்காக நீதி நியாயங்களையும் புரட்டுகின்றவர்களாக இருந்து வந்தார்கள். ஆனாலும், அந்தப் பட்டனார், முகத்தாட்சண்யம் இல்லாமல், இரண்டு குடும்பங்களுக்கும் நன்மை செய்கின்றவராகவே இருந்து வந்தார். அதைக் கண்டு அந்த வாலிபனானவன், தன் பட்டனாரை நோக்கி: தாத்தா, நீங்கள் ஏன் அநீதியின் வழிகளை ஆதரிக்கின்றவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். அவர்களிடத்தில் எதைக்குறித்து எந்த நன்றியும் இல்லையே என்றான். அதற்கு பட்டனானவர் மறுமொழியாக: தம்பி, முற்றத்திலே நிற்கின்ற மாமரத்தின் கனியை ருசி பார்த்திருக்கின்றாயா என்று கேட்டார். அதற்கு அவன், அது நல்ல சுவையான கனிகளை கொடுகின்றது என்றான். பட்டனானவர் அவனை நோக்கி: அந்த மரம் யாருக்கு நல்ல கனியை கொடுக்கும், நீதி செய்கின்றவர்களுக்கோ அல்லது அநீதி செய்கின்றவர்களுக்கோ என்றார். அதற்கு அவன்: அது யாவருக்கும் ஒரே விதமான கனியையே கொடுக்கும் என்றான். அதற்கு அவர்: தம்பி, அப்படியாகத்தான் கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்களின் வாழ்க்கையும் இருக்க வேண்டும். நம் வாழ்க்கையிலே நாம் நல்ல கனியை கொடுப்பது, மற்றவர்களுடைய சுபாவத்தை குறித்ததல்ல, மாறாக அந்த திவ்விய சுபாவம் எங்களுடைய இயல்பாக மாற வேண்டும். அந்த மேலான சுபாவத்திலே நாம் அனுதினமும் வளர வேண்டும் என்று அவனுக்கு ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே, பூமிக்கு உப்பாக இருப்பதும் அவ்வண்ணமாகவே, நம்முடைய இயல்பாக இருக்க வேண்டும். நம்முடைய சுய பெலத்தினால், எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் சம்பூரணராக இருந்துவிட முடியாது. ஆனால், நாம் அப்படிப்பட்ட சுபாவத்திலே வளர வேண்டும் என்று எண்ணமும் வாஞ்சையும் நம்மிடத்தில் இருக்கும் போது, தேவ ஆவியானவர் தாமே, ஆகாததை ஆகும்படியாக செய்வார்.

**லூக்கா 6:33**

**உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன?**

**ஜெபம்**: உன்னதத்திலே வாசம் செய்யும் என் பிதாவாகிய தேவனே, உம்முயைட பிள்ளையாகிய நான், அனுதினமும் கிறிஸ்துவின் சாயலிலே மறுரூபமாகும்படி எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய உபயோகம்

நம்முடைய வாழ்வு இந்த பூமியிலே உபயோகமள்ளதாக இருக்க வேண்டும் என்பதின் ஆழத்தை தெரிவிப்பதற்காக, ஆண்டவராகிய இயேசு தாமே, நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள் என்று கூறி யிருப்பதை நாம் கடந்த சில நாட்களாக தியானித்து வருகின்றோம். உப்பானது அதன் உருவத்தை இழந்து, உணவுப் பதார்த்தங்கள் கெட்டுப் போகாமல் பேணிப் பாதுகாக்கின்றது. அது அதன் உருவத்தை இழந்தாலும், அதன் சாரத்தை இழந்து போவதில்லை. அதுபோல, நாமும் இந்த உலகத்திலே நான் இன்னார் என்கின்ற அடை யாளத்தின் மேன்மையை இழந்து போக நேரிட்டாலும், திவ்விய சுபாவத்தின் இயல்பினை இழந்து போகக்கூடாது. எதற்காக? இந்த உலகிலே கல்வியை பெருகப்பண்ணுவதற்காகவா? நம் வாழ்விலும், மற்றவர்கள் வாழ்விலும் பூமியில் உண்டான பொருளாதாரத்தை பெரு கப் பண்ணுவதற்காகவா? பூமியை சுத்தமாக வைத்திருப்பதற்காகவா? இவைகளிலே பிரயோஜனங்கள் உண்டு ஆனால், அவை ஒருவரையும் தேவனுடைய ராஜ்யதத்திற்கு இட்டுச்செல்வதில்லை. பூமிக்குரியவைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் சில ஆலோசனைகளை இன்று ஆராய்ந்து அறிந்து கொள்வோம். “பூமியிலே உங்களுக்குப் பொக்கி‘ங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.” (மத்தேயு 6:19-21). நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல,மேலானவைகளையேநாடுங்கள். (கொலோ *3:1-2*). அதாவது, நம்முடைய உபயோகமானது, மற்றவர்களை ஆண்டவர் இயேசுவோடு சேர்ப்பதாக இருக்க வேண்டும். அழிந்து போகும் இந்த பூமியின்மேல் ஆசை வைத்து, மனிதர்கள் அழியாமையை இழந்து போகாதபடிக்கு, மனித குலமானது நன்மையை பெற்றுக் கொள்ளும் படிக்கு, நாம் தேவனுடைய ராஜ்யத்தின் மகிமைக்காக வாழ வேண்டும்.

**1 யோவான் 2:15**

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த பூமியையும் அதிலுள்ளவைகளையும் பற்றிக் கொள்ளாமல், உம்முடைய ராஜ்யத்தின் மேன்மைக்காக உபயோகமுள்ள பாத்திரமாக நான் வாழும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 📖 மாலை வாசகம் – மத்தேயு 5:14 –16

# உலகத்திலே சுடர்விடுங்கள்

உப்பு அதன் சாரத்தை இழந்து போனால் அதற்கு மேற்கொண்டு வேறு உபயோகம் இல்லாதது போல, வெளிச்சமானது அதன் ஒளியை வீசா விட்டால், அதை அதன்பின்பு வெளிச்சம் என்று கூறமுடியாது. நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கின்றீர்கள் என்று ஆண்வராகிய இயேசு தம்மைப் ஏற்றுக்கொண்டு, பின்பற்றுகின்றவர்களை குறித்து கூறியிரு க்கின்றார்.ஒளிவீசும் போது வெளி ச்சம் உண்டாவதால், அந்த வெளி ச்சத்திலே நடப்பவர்கள் இடறி விழாமல் நடப்பதற்கு பாதையை கண்டு கொள்கின்றார்கள். இந்த உலகத்திலே, தேவனை அறியாத அவிசுவாசிகளும், பலருக்கு வழி காட்டிகளாக இருக்கின்றார்கள். பல தானதர்மங்களையும் நன்மைக ளையும் செய்து வருகின்றார்கள். அவர்கள் ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கள் எப்படிப்பட்ட நன்மைகளை செய்தாலும், பரலோகத்திற்கு செல்லும் வழியை அறிவார்களோ? அவர்கள் இந்த உலகத்திற்கு ஆண்டவராகிய இயேசு கூறும் வெளிச்சமாக பிரகாசிக்க கூடுமோ? இல்லை. குருடருக்கு குருடர் வழிகாட்டிகளாக இருக்க முடியாது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அப்படியானால், நம்மிடத்தில் பிரகாசிக்கும் வெளிச்சத்தின் மேன்மை என்ன? நாம் எடிப்படியாக இந்து உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க முடியும்? ஏழைகளுக்கு தானதர்மங்களைும் உதவிகளையும் செய்து வந்தால் போதுமோ? அவிசுவாசிகளும், அஞ்ஞானிகளும் அப்ப டியே செய்து வருகின்றார்கள் அல்லவா? “நீங்களோ, உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழை த்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ள ப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதி யாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங் கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவரு டைய ஜனங்களாயிருக்கிறீர்கள்” எனவே முதலாவதாக நம்முடைய வா யின் அறிக்கையினாலும், நம்முடைய செயல்களினாலும் நம்மை அழை த்த வருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும். தேவ ஜனங்கள் என்று பெயர் பெற்றிருக்கும் நாம் அந்த பெயருக்கு பாத்திராக நடந்து கொள்ள வேண்டும். வீட்டிலும், கல்வி நிலையங்களிலும், வேலை இட ங்களிலும், வெளி இடங்களிலும், நண்பர்கள் உறவினர்கள் மத்தியிலும், இந்த வெளிச்சமானது எப்பொழுழம் எங்களிலிருந்து வீசப்பட வேண்டும்.

**பிலிப்பியர் 2:14**

**ஜீவவசனத்தைப் பிடித்துக்கொ ண்டு, உலகத்திலே சுடர்களை ப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,**

**ஜெபம்:** திவ்விய ஒளியை என்மேல் பிரகாசிப்பிக்க பண்ணின தேவனே, அந்த ஒளியிலே நான் நடக்கின்றவனாகவும், அந்த ஒளியை மற்றவர்கள் மேல் வீசுகின்றவனாகவும் இருக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தீபத்தை மறைத்து வைக்காதிருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடும்பத்திலே, தாயாளவள் மாலை வேளையிலே விளக்கை கொழுத்து, அதன் புகைபோக்கும், கண்ணாடி கூண்டாகிய சிம்னியினால் எரியும் தீபத்தை மூடி விளக்கை தூக்கி, அறைமுழுவதும் வெளிச்சம் வீசும்படிக்கு, விளக்கு தண்டில் மேல் வைத் தால். தன் நண்பர்களோடு படிக்கச் சென்ற மனானாவன், திரைப் படத்தை பார்த்து, தவறான காரியங் களை செய்து, குறித்த நேரத்திற்கு வீடு திரும்பமாமல், சற்று நேரம் தாழ் த்தி வீடு திரும்பினான். அறைக்குள் வந்தவுடன், தாயாளவன் தன் முகபா வனையை காணாதபடிக்கு, அவன் இரு க்கும் இடத்திலே விளக்கின் வெளி ச்சம் வீசாதபடிக்கு, ஒரு தகரப்பெட்டியை எடுத்து விளக்கின் பக்கமாக வைத்துவிட்டான். இன்று சில விசுவாசிகள், இந்த உகத்த்திலுள்ள அவி சுவாசிகளோடு உறவை ஏற்படுத்தி, அதை பேணிப் பாதுகாத்துக் கொள் வதற்காக, மிகவும் முக்கியமான நேரங்களிலே தங்களில் எரியும் தீப மானது, அவிசுவாசிகளின் மேல் வீசாதபடிக்கு, அந்த வாலிபனானவன், தகரப்பெட்டியினால் விளக்கை மறைத்தது போல, மறைத்து விடுகின் றார்கள். அதை அன்பென்றும் பண்பென்றும் நினைத்துக் கொண்டு, மெய்யான ஒளியானது நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படியா கவே வெளிப்பட்டது என்பதை மறந்து போய் விடுகின்றார்கள். இவர்கள் உறவு வைத்திருக்கும் அவிசுவாசிகளும், இவ ர்களுக்கும் இடையிலே இந்த உலகத்தின் சில காரியங்களைக்குறித்த ஐக்கியமும் விரும்பமும் இருப்பதினாலே, தங்கள் வெளிச்சத்தை மறை த்துக் கொள்கின்றார்கள். எப்படி அதை மறைத்துக் கொள்கின்றார்கள்? ஆச்சரியமான ஒளியினிட த்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதை நிறுதி விடுகின்றார்கள். அவிசுவாச நண்பர்களை இரட்சிக்க வேண்டும் என்று, தங்கள் குடும்ப ஜெப நேரங்களை மாற்றி அமைக்கின்றார்கள் அல்லது விட்டு விடுகின்றார்கள். ஞாயிறு ஆராத னைகளை விட்டு, அவர்களு டைய திருவிழாக்களிலே பங்கேற்று சிறப்பிக்கின்றார்கள். அந்த இடங் களிலே மெய்யான ஒளியை இவர்கள் வீசுவதில்லை. பிரியமானவர்களே, ஒருவன் இந்த உலகத்திற்கு வந்த மெய்யான ஒளியை நிரகாரித்து, அந்த ஒளியை பெற்ற உங்களை ஏற்றுக் கொண்டு உங்களோடு அந்யோந்நி ஐக்கியமாக இருந்தால், உங்கள் வாழ்க்கையைக் குறித்து வேத வார்த் தையின்வெளிச்சத்திலே ஆராய்ந்து பாருங்கள். உங்கள் அழைத்த ஆண் டவர் இயேசுவின் புண்ணியங்களையும் நீங்கள் அறிக்கின்றீர் களா? அல்லது சமரசம் செய்கின்றீர்களா என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

**மத்தேயு 5:14**

மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

**ஜெபம்**: திவ்விய ஒளியை எனக்குள் பிரகாசிப்பித்து தேவனே, அந்த ஒளியை நான் இடத்திற்கு இடம் மறைத்து வைக்காமல், அந்த ஒளியின் முதன்மையான நோக்கத்தை வெளிப்படுத்த கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவன், தன் உழைப்பின் பிரயாசத்தின் பெரும்பகுதியை மதுபானத்திலும், புகைத்தலிலும் செலவு செய்து வந்தான். சில ஆண்டுகளுக்கு பின்னர், அவனுடைய மனைவியானவள், ஆண்டவர் இயேசுவை குறித்து அறிந்து, அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள். கணவனுடைய மனக்கண்கள் ஏற்கனவே குருடாக இருந்தது. தற்போது, அவள் குடும்பத்திலே நெருகங்களும், பாடுகளும் அதிகமாயிற்று. இந்த நிலையிலே அவள் வாழ்க்கையிலே உலகத்திற்கு ஒளியாக இருக்க வேண்டும் என்னும் வார்த்தையை எப்படி கைகொள்ள முடியும். அவளுக்குள்ளே பிரகாசித்த தெய்வீக ஒளியானது முதலாவதாக தன் சொந்தக் குடும்பத்திலே சுடர்விட வேண்டும். அதை எப்படி நடப்பிக்க வேண்டும். கணவனானவன், உலகத்திற்குரிய வாழ்க்கை வாழ்வதால், அவனைத் விட்டு விட முடியுமோ? இல்லை. இரட்சிப்படைந்த பின்பு, உலக போக்கிலே வாழும் நண்பர்களையும் உறவுகளையும் விட்டு சற்று விலகியிருப்பது போல, அவள் தன் கணவனை விட்டுவிலகுவது அவளுக்குண்டான ஒரு தெரிவு அல்ல. கணவனைக் காணும் போதெல்லாம், வேத வார்த்தைகளை கூறி கணவனைக் குற்றப்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமோ? இல்லை. பாடுகள், கஷ்டங்கள் மத்தியிலும், அவள் ஆண்டவர் இயேசுவுக்காக எரிந்து கொண்டிருக்க வேண்டும். அதன்பொருட்டு முதலாவதாக,தான் கண்டு பேரொளியை தன் கணவனானவரும், கண்டு கொள்ள வேண்டும் என்கின்ற வாஞ்சையுடையவளாக இருக்க வேண்டும். பிரசாகமுள்ள மனக்கண்களை கணவருக்கு கொடுக்கும்படியாக அனுதினமும் ஊக்கமாக வேண்டுதல் செய்ய வேண்டும். “அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்தி க்கொள்ளப்படுவார்கள்.” (1 பேதுரு 3:1-2). புரிசுத்த வேதாகமம் கூறும் குணசாலியான ஸ்திரியைப் போல, (நீதி 31:10-12). தன் கணவனின் வழியாக, தன்னில் திவ்விய சுபாவங்கள் உருவாகுவதற்கு தன்னை விட்டுக் கொடுக்க வேண்டும். அப்பொழுது, அவளுடைய கீழ்படிவையும், ஒழுக்கத்தையும் காணும் மனிதர்கள், அவளிலே உண்டாயிருக்கும் நல்ல மாற்றங்களை கண்டு அவளிலே உண்டான மாற்றங்கள் தேவனாலே உண்டானது என்று அறிந்து கொள்வார்கள்.

**மத்தேயு 5:16**

**…உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.**

**ஜெபம்:** செம்மையான வழியிலே என்னை நடத்தும் தேவனே, வாழ்வு தரும் உம்முடைய திருவார்த்தைகளை நான் தியானித்து அந்த வார்த்தைகளின் வழியிலே நான் வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகத்தின் வெளிச்சம்

புதிதாக கம்பனியிலே இணைந்து கொண்ண விசுவாசியாகிய வாலிபனொருவன், அங்கே அவிசுவாசியான ஒருவனோடு நண்பனாகிவிட்டான். அவர்களுக்குள்ளே எழுதப்படாததும், பரஸ்பர புரிந்துணர்வுவோடுகூடிய ஒப்பந்தம் இருந்தது. அதன்படிக்கு, அவர்கள் மதநம்பிக்கைகளைபற்றி ஒருபோதும் பேசிக் கொள்ளாமலும், அவிசிவாசியானவன் சத்தியத்தை விட்டு விலகி நடந்தாலும், அதை கண் டித்து உணர்தாமலும் இருப்போம் என்பதாகும். விசுவாசியானவன், அவிசுவாசியானவனுடன் உல்லாச பயணங்கள், சுற்றுலாக்கள்செல்லும் போது, ஞாயிறு ஆராதனைகள், ஜெபக்கூட்டங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட ஆயத்தமுள்ளவனாக இருந்தான். ஆனால், அவிசுவாசியானவனின் விரத நாட்கள் வரும்போது, அதைக் குறித்து எதையும் எவரும் பேசிக் கொள்ளவோ, தடைசெய்யவோ முடியாது. அந்த விசுவாசியானவன், நியாயம் என்ன? தான் நித்திய ஜீவனை அடையும் வழியிலே நடப் பதைவிட, அந்த அவிசுவாசியானவனை தன் நடக்கையினாலே இரட்சிக்கும்படியான அழைப்பையே தான் பெற்றிருக்கின்றேன் என்று எண்ணிக் கொண்டான். தெய்வீக ஒளியை உங்களுக்குள் பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, "அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." (2 கொரி 4:4). அந்த ஒளியை பெற்ற நீங்களோ, முதலாவதாக, வஞ்சிக்கப்பட்டு போய்விடாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். இந்த உலகத்திலுள்ள நட்புகள், உறவுகளைவிட்டு முற்றிலும் நாம் பிரிந்திருக்க முடியாது. ஆனால், உலகத்திலுள்ளவர்களில் சிலர் உங்கள் நண்பர்களாகவும், நெருங்கிப் பழகும் உறவுகளாகவோ இருந்தால், அவர்கள் உங்களில் தெய்வீக ஒளியை காண இடங் கொடுக்கும்படிக்கு, அந்த வெளிசத்தை மறைத்து வைக்காதிருங்கள். அவர்களில் அநியாயங்களையும், அநீதிகளையும், பாவங்களையும் காணும்போது, வேத வார்த்தையின்படி அதை அவர்களுக்கு உணர்த்தி, அதன் பின்விளைவுகைள கூறுங்கள். அதை உங்களுக்கு கூறமுடியவில்லை என்றால், நீங்கள் யாரைப் பிரியப்படுத்தப் பார்க்கின்றீர்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்

**மத்தேயு 5:15**

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

**ஜெபம்**: நல் ஆலோசனைகள் தரும் பரம தகப்பனே, உம்முடைய ஆலோசனைகளை நான் அசட்டை பண்ணாமல், நீர் காட்டும் நேரிய வழியிலே செல்ல எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வெளிச்சத்தின் பிள்ளைகள்

தேவனுடைய அநாதி தீர்மானமானது மனிதகுலத்தின் வாழ்விலே நிறை வேறும்படிக்கு நாம் இந்த பூமிக்கும், உலகத்திற்கும் உபயோகமுள் ளவர்களாக இருக்க வேண்டும். விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே யாவும் சுமூகமாயும் சௌக்கியமாயும் இருக்கும் போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே, நற்கிரியைகளை செய்து தேவனுக்கு உபயோகமுள்ள பாத்திரமாக இருப்பது ஓரளவிற்கு இலகுவானதாக இருக்கும். ஆனால், தீமை நிறைந்த உலகத்திலே, சக விசுவாசிகள் நன்மைக்கு கைமாறாக தீமை செய்யும் போது, அவர்களுக்கு மனதார நன்மை செய்வது மனித பெலத்திற்கு அப்பாற்பட்ட காரியமாக இருக்கும். கோணலும், மாறுபாடான உலகத்திலே வாழ்ந்து கொண்டு, உலக போக்கிலே வாழாமலும், இருளான உலகத்தோடு ஐக்கியமாக இருக்காமல், அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய் (2 கொரி 6:17) அவர்களுக்கு மத்தியிலே வெளிச்சமாக இருப்பது எப்படி சாத்திமாகும்? இது மனித அறிவுக்கும் எட்டாத காரியமாக இருக்கின்றது. மனிதனால் ஆகாத காரியங்களை செய்து முடிப்பதற்காக, சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார். நம்முடைய பெலவீனங்களிலே பெலனடைவதற்கு பூரண கிருபையை தேவன் நமக்கு நாள் தோறும் பொழிகின்றார். அந்தக் கிருபையை நமக்கு தகுந்த நேரத்தில் அவர் தருகின்றார். ஆனால், நாமோ அதை விருதாவாக்கிவிடக்கூடாது. அதாவது, ஒளிக்கும் இருளுக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லை. எனவே, ஒரு விசுவாசியானவன், அவிசுவாசியோடு உற்ற நண்பனாக இருக்க முடியாது. முதலாவதாக, நாம் அந்த சிந்தையுள்ளவராக இருக்க வேண்டும். உலகத்தோடு நட்பை ஏற்படுத்தி, அதை பேணிப் பாதுகாப்பதற்கு தேவ வார்த்தைகளை தேடாமல், தேவ சித்தத்தை நிறைவேற்ற நான் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றேன் என்று விசுவாசியானவன் தேவ சமுகத்திலே தன்னை தான் தாழ்த்தி ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்போது, தேவ ஆவியானவர்தாமே, நாம் தேவசித்தப்படி, இந்த பூமிக்கும், உலகத்திற்கும் உபயோமுள்ளவர்களாக எப்படி இருப்பதென்பதை கற்றுத் தந்து வழிநடத்திச் செல்வார். அப்பொழுது நம் வழியாக பிதாவாகிய தேவனுடைய நாமும் மகிமைப்படுத்தப்படும். நாம் பகலுக்குரியவர்கள் என்று கூறி இருளிலே நடமாடுகின்றர்களோடு ஐக்கியமாக இருப்பது எப்படி?

**1 தெச 5:5**

**நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்;**

**ஜெபம்**: வெளிச்சத்தின் பிள்ளையாக என்னை மாற்றிற தேவனே, இருளிட்குட்பட்டவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்க பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனிதனுடைய சொந்த பெலன் குறைவுள்ளது

நியாயப் பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட கட்டளைகளை யாரால் நிறைவேற்ற முடியும்? ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசுதாமே வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு: நியாயப்பிர மாணத்தில் எழுதியிருக்கின்ற கற்பனைகளைகைகொள் என்றார். அதற்கு அவன்: போதகரே, இவை களையெல்லாம்என்சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவ னைப்பார்த்து, அவனிடத்தில் அன்பு கூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு: நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்.” (மாற்கு 10:17-23). இந்த உலகத்தின் பார்வையிலே, வெளிப்படையாகநியாயப்பிரமாணத்தை தாங்கள் கைகொள்கின்றோம் என்று மற்றவர்களுக்கு காண்பித்தவர்களையும், தாங்கள் நீதிமான்கள் என்று தங்களுக்குள்ளே எண்ணிக் கொண்டவர்களையும் வேதத்திலே காணலாம். ஆனால், இருதங்களை ஆராய்ந்தறிகின்றவர், மனிதர்களின் உண்மையான நிலைமையை அறிந்திருக்கின்றார். மேலே கூறப்பட்ட சம்பவத்திலே, ஆண்டவர் இயேசுவை சந்திக்க வந்தவன், தான்நியாயப்பிரமாணத்தை கைகொள்கின்றேன் என்று எண்ணிக் கொண்டான். ஒரு விசுவாசியானவன் மிகையான செல்வத்திலே வாழ்ந்து கொண்டு, தெருவிலே, ஓரமாக படுத்திருக்கும் ஏழைக்கு, உண்பத்தற்கும் உணவும், உடுபத்தற்கு தகுந்து உடையும், மழை வெய்யிலுக்கு ஒதுங்குவதற்கு இடமும் இல்லாதிருககிறதை கண்டும், அவனுக்கு ஒருவேளை ஆகாரத்தை கொடுத்துவிட்டு தன் கடன் தீர்ந்தது என்று தேவனுக்கு முன்பாக கூற முடியுமோ? அவன் உன்னில் அன்பு கூருகின்றது போல உன் அயலவனிடத்திலும் அன்பு கூருவாக யாக என்ற கட்டளையை கைகொள்ளாது போகின்றான். எந்த மனிதனுடைய பெலத்தினாலும் தேவ கட்டளைகளை நிறைவேற்ற முடியாது.

**ரோமர் 13:9**

**உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக**

**ஜெபம்**:மனிதனால் செய்யக்கூடாததை கூடும்படியாய் செய்யும் தேவனே, என் சுயபெலத்தை நம்பி, என் கிரியைகள் வழியாக நான் நீதிமானாகுவேன் என்கின்ற எண்ணத்தைவிட்டு உம்மை நம்பி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனால் எல்லாம் கூடும்

"நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டேன்." (அப் 22:3). "நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன் பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன் பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்தி ற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்." என்று தேவ ஊழியராகிய பவுல், கிறிஸ்துவை அறிவதற்கு முன்னதாக இருந்த தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து கூறியிருக்கின்றார். அதாவாது, மோசே ஊடாக கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களின்படி, அவரிடத்தில் ஒருவரும் குற்றம் கண்டு பிடிக்க கூடாதிருந்தது. மனிதர்களால் வரும் புகழ்சியினால் ஒருவன் தேவனை பிரியப்படுத்தக் கூடுமோ? இல்லை. தேவனுடைய ஒளியானது, பவுலின் மேலே பிரசாசித்த போது, அவர் தன்னிடத்திலிருக்கும் இருளை உணர்ந்து கொண்டார். கர்த்தரை அறியாமல், அவரை துன்பப்படுத்தி வருகின்ற மனுஷன் எப்படி கர்த்தரை பிரியப்படுத்த முடியும்? கர்த்தரை இன்னார் என்று அறியாமல் எப்படி அவரை முழு மனதோடு தொழுது கொள்ள முடியும்? தேவ ஊழியராக பவுல், அவருடைய முன்னைய வாழ்விலே, கர்த்தரை இன்னார் என்று அறியாதிருந்தார். தேவனாகிய கர்த்ரை பிரியப்படுத்துகின்றேன் என்று எண்ண, தன் கிரியைகளால், அவரை துன்பப்படுத்தி வந்தார். பின்பு, அவருடைய கண்கள் திறக்கப்பட்ட போது, தன் உண்மை நிலையை அறிந்து கொண்டார். தன் வாழ்வு எவ்வளவு நிர்பந்தமுள்ளதென்பதை உணர்ந்து கொண்டார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்க ளில் பிரதான பாவி நான்." என்று அறிகை செய்தார். பிரியமானவர்களே, கருப்பொருளாவது, அன்றும், இன்றும், என்றும், எந்த மனிதர்களுடைய பெலத்தினாலும், தேவ கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றி முடிக்க இயலாது. அப்படியானால் தேவனுடைய கட்டளைகள் அவசியமற்றதா? இல்லை, அவசியமானது. எனவே சட்டதிட்டங்களை கைகொள்கின்றேன் என்று பெருமை பாராட்டாமல், செய்ய முடியாததை செய்யும்படி நம்மை பெலப்படுத்தும்படி நம்மை தேடி வந்த கர்த்தராகிய இயேசுவினித்திலே சேருங்கள்.

**லூக்கா 18:14**

என்னைப் பெலப்படுத்து கிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு

**ஜெபம்**: என் பெலவீனத்திலே உம்முடைய கிருபையை பொழிகின்ற தேவனே, என் கிரியைகளைக் குறித்து நான் மறுபடியும் மெச்சிக் கொள்ளாதபடிக்கு, உம்முடைய கிருபையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நியாயப்பிரமாணத்தின் உபயோகம்

ஆதியிலிருந்து, அந்தம் வரை இரட்சிபானது விசுவாசத்தினால் வருகின்றது. நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் நீதிமாகுவதில்லை. அப்படியானால், அந்த நியாயப்பிரமாணம் பிரயோஜனம் என்ன? நிறைவேற்ற முடியாததை மனிதர்களுக்கு கொடுப்பதினால் அதனால் உண்டாகும் பலன் என்ன? நல் வழியிலே வாழ விரும்பும் மனிதர்களில் சிலர் தங்களை ஒடுக்கி பல நற்செயல்களை செய்கின்றார்கள். தங்கள் வாழ்விலே மீறுதல்கள் உண்டாகும் போது, அவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பலவிதான பரிகாரங்களை செய்தும், குற்ற உணர்வு அவர்களை பின்தொடர்வதால், மனதிருப்தியில்லாமல் வாழ்கின்றார்கள். விடுதலையடைய வழி இல்லையோ என தவிக்கின் றார்கள். இவ்விதமாக நியாயப்பிரமாணமானது, ஆதாம், ஏவாளின், பூர்வீக பாவத்தன் விளைவினால், மனித குலத்திற்கு ஏற்பட்ட, நிவர்த்தி செய்ய முடியாத மனித சுபாவத்தின் உள்ளார்ந்த சீர்கேட்டைப் பற்றிய உணர்வையும், மனிதர்களின் ஆவிக்குரிய ஏழ்மை நிலையையும், தங்களை மீட்டு இரட்சிக்கக்கூடிய ஒரு இரட்சகர் தேவை என்ற உணர்வையும் கொடுத்து, உலகத்தை மீட்க வந்த இரட்சகராகி இயேசு வினிடத்திற்கு வழிநடத்துகின்றது. “இரட்சராகிய இயேசு தாமே,தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூப மாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” பிதாவின் சித்த த்தை சம்பூரணமாக நிறைவேற்றினார். முதலாவதாக, அவர் ஒருவரே நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்ட எல்லா காரியங்களையும் தம்முடைய வாழ்விலே கடைப்பிடித்து முற்றாக நிறைவேற்றினார். நிறைவேற்றி முடித்தார் என்பதினால், நியாயப்பிரமாணத்திலுள்ள யாவற்றையும் அவர் அழித்துப் போட்டார் என்பது பொருளல்ல. “என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.” என்று பத்துக் கட்டளைகளிலே கூறப்பட்டிருக்கின்றது. அதை அவர் எப்படி அழித்துப் போட முடியும்? தேவத்துவத்தின் தெய்வீக தன்மைகள் ஒருபோதும் அழிந்து போவதில்லை. ஆனால் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.

**கலாத்தியர் 3:24**

**நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.**

**ஜெபம்**: இரட்சிப்பின் தேவனே, நான் எப்போதும் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருந்து, உம்முடைய அழியாத வார்த்தைகளிலே நிலைத்திருக்க எனக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.